


# 30.08.2026 செய்திகள்

## அதிக சர்க்கரை கலப்புடைய உணவுப் பொருள்களில் சிவப்பு எச்சரிக்கை குறியீடு : எஃப்.எஸ்.எஸ்.ஏ.ஐ. திட்டம்

- அதிக சர்க்கரை, கொழுப்பு கலப்புடைய உணவுப் பொருள்களில் சிவப்பு வண்ண எச்சரிக்கை குறியீடு பதிக்கும் திட்டம்.
- மத்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தால் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.
- அதில், இந்திய மருத்துவ கவுன்சிலால் 2024–ஆம் ஆண்டில் இந்தியர்களுக்காக தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்ட உணவுப் பழக்கம் தொடர்பான வழிகாட்டுதல்களை அடிப்படையாகக் கொண்டு, பொட்டல் உணவுகளில் எவ்வளவு சர்க்கரை, உப்பு, கொழுப்பு உள்ளது என்பது அதில் குறிப்பிடப்பட்டு, அதிகம் இருப்பின் அதிக கொழுப்பு, அதிக சர்க்கரை உள்ளது என்று சிவப்பு நிறத்தில் எச்சரிக்கை குறியீடு பதிக்கும் திட்டம் முன்மொழியப்பட்டு இருந்தது.
- இவ்வாறு சிவப்பு நிற எச்சரிக்கை குறியீடு பொட்டல உணவுகளில் முன்பக்கம் பதிக்கப்படுவதன் மூலம் அதைப் பார்த்து உணவுகளில் உள்ள சர்க்கரை, உப்பு, கொழுப்பு உள்ளிட்டவற்றின் அளவை மக்கள் எளிதில் அறிந்து கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

SURESH'

SURESH'


| TUTICORIN | TIRUNELVELI | RAMANATHAPURAM | MADURAI | CHENNAI | COVAI | TENKASI | SALEM |
|---|---|---|---|---|---|---|---|
| 99445 11344 | 98942 41422 | 75503 52916 | 98431 10566 | 97555 52003 | 90433 10773 | 98840 51717 | 95147 89102 |